புதுச்சேரி அரசு




மேதகு துணைநிலை ஆளுநர்

டாக்டர் **இக்பால் சிங்** அவர்கள்

# புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை

18 ஆகஸ்ட், 2011

மேதகு துணைநிலை ஆளுநர்

டாக்டர் **இக்பால் சிங்** அவர்கள்

**புதுச்சேரி சட்டப்பேரவையில்**

**ஆற்றிய உரை**

*இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட*
*பெயலும் விளையுளும் தொக்கு.*

*- குறள்*

***மதிப்புமிக்க சட்டப்பேரவையின் மாண்புமிகு தலைவர் அவர்களே !***

***மேன்மைமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே!***

**பு**தியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், புதுச்சேரி மக்களுக்கும் எனது இதயங்கனிந்த வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் புதிய அமைச்சரவைக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் 13-வது சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடரில் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இணக்கம் மற்றும் சமநிலையுடன்கூடிய தொலைநோக்குப் பார்வையுடன் கடந்தகால பணியின் தொடர்ச்சியை பேணுவதன் மூலம் புதுச்சேரிவாழ் மக்கள் மற்றும் ஆட்சிப்பரப்பின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள்

அரும்பணியாற்றுவார்கள் என நான் திடமாக நம்புகிறேன். மக்கள் மற்றும் ஆட்சிப்பரப்பின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தமது அலுவல் கடமைகளை ஆற்றுவார்கள் என்பதில் எனக்கு ஐயம் ஏதுமில்லை. புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் சட்டப்பேரவைக்கு அண்மையில் நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலை அமைதியான முறையிலும், வெளிப்படையாகவும், விரும்பத்தகாத நிகழ்வு ஏதுமின்றியும் நடத்திய அரசு நிர்வாகத்திற்கும் இந்த ஆட்சிப்பரப்பு மக்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**2.** திட்டமிடலுக்கு வகைசெய்யும் திட்டக்குழுவால் தயார் செய்யப்பட்ட புதுச்சேரி மாநில மேம்பாட்டு அறிக்கையானது, 12ஆம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தின்போது (2012-17) ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் உயர் வளர்ச்சிப் பாதையை எட்டுவதற்கு வழிவகுக்கும் என நான் நம்புகிறேன். கடந்த ஆண்டின்போது வள ஆதாரங்களைத் திரட்டுவதில் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக 2010-11 ஆம் ஆண்டில், ₹ 307 கோடி கூடுதலாக திரட்டப்பட்டது என்பதை நான் மனநிறைவோடு குறிப்பிடுகிறேன்.

**3.** நமது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் நடப்பாண்டு திட்ட ஒதுக்கீடாக ₹ 2,750 கோடி பெறப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டு ஒதுக்கீட்டைவிட ₹ 250 கோடி அதிகம் என்பதை தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். எனது அரசு இந்த ஒதுக்கீட்டுத் தொகையை உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்குவதற்கும் ஒட்டுமொத்த துறைவாரியான மேம்பாட்டிற்கும் செலவிடும். முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில், 2011-12ஆம் ஆண்டில் மத்திய அரசு கூடுதல் மத்திய நிதி உதவியாக ₹ 150 கோடியை அளித்ததற்கு மத்திய அரசுக்கு என்னுடைய அரசின் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். உயர்நிலையான திட்டச் செலவினத்தை அடைவதற்காக, நாமும் அதற்கு ஈடான நிதி ஆதாரங்களைத் திரட்டவேண்டியுள்ளது. மாநிலத்தின் பொருளாதார நிலையை நிர்ணயம் செய்திட, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) ஒரு குறியீடாக உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2011-12ஆம் ஆண்டின் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP), ₹ 14,862 கோடியாக இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

4. மதிப்புக் கூட்டு வரி வசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எமது அரசு வணிக சமுதாயத்தினருக்கு பயனளிக்கும் வகையில், வரி விவர அறிக்கைகளை இணையம் மூலம் தாக்கல் செய்தல், உறுதிமொழி படிவங்களை இணையம் மூலம் வழங்குதல் மற்றும் இணையம் மூலமான பதிவு செய்தல் போன்ற சேவைகள் இணையம் மூலம் எளிமைப்படுத்தியும் செம்மைப் படுத்தியும் அறிமுகப்படுத்தியுள்ளது. இது வணிகர்களுக்கும் துறைக்கும் ஆகும் நேரச்செலவை பெருமளவில் குறைத்து இருதரப்பினரிடமும் நல்ல இணக்கத்தை உறுதிசெய்துள்ளது. குறைந்த வரிவீதங்கள் மற்றும் மின் ஆளுகை நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க வருவாய் அதிகரிப்புக்கு பங்களித்துள்ளது.

5. வேளாண்மை, இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த ஆண்டு, உரிய நேரத்தில் காவிரி நீர் விடுவிக்கப்பட்டதால், அப்பகுதியில் விதைகள், உரங்கள் போன்ற பல்வேறு வேளாண் இடுபொருட்களுக்கு பெரும் தேவை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய நிகழ்வை

எதிர்கொள்ளும் பொருட்டு, வரும் சம்பா பருவத்திற்காக நெல் விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை போதிய அளவில் இருப்பு வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விதை உற்பத்தி மற்றும் சான்றளித்தலுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ், புதுச்சேரி விதை சான்றளிப்பு முகமையால், 894 மெட்ரிக் டன் நெல் சான்றளிக்கப்பட்டுள்ளது / மூல விதைகள் குறித்த விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் நடப்பு முன்பருவ பயிர் (Kharif) பருவத்திற்காக 86 மெட்ரிக் டன் சான்றளிக்கப்பட்ட நெல் / மூல விதைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 814 மெட்ரிக் டன் நெல் விதைகள், 20 மெட்ரிக் டன் பயறுகள் மற்றும் 30 மெட்ரிக் டன் மணிலா விதைகள் ஆகியவை பாசிக் (PASIC) கிடங்குகளின் மூலம் எஞ்சியுள்ள ரபி பருவ மற்றும் கோடைப்பருவத்தில் வழங்கப்படும்.

**6.** புதுச்சேரியில் முதல்முறையாக, தேசிய தோட்டக்கலை திட்டத்தின்கீழ், 5 பசுமை இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் அனைத்துப் பருவங்களிலும் காய்கறிகள் சாகுபடி செய்ய ஏதுவாகும்.

தேசிய தோட்டக்கலை திட்டத்தின் செயல்திட்டங்களை செயல்படுத்துவதற்கு புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு மாநில தோட்டக்கலை மேம்பாட்டு சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. துல்லிய வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப தலையீட்டின் மூலமாக உயர்தொழில்நுட்ப தோட்டக்கலை திட்டத்தின்கீழ் இதுவரை 230 ஹெக்டேர் நிலப்பரப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் 219 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். தொலைதூர சந்தையை மேம்படுத்தும் பொருட்டும் புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு விவசாயிகளுக்கிடையே ஒற்றுமையையும் நெருக்கத்தையும் ஏற்படுத்தும் பொருட்டும், துல்லிய வேளாண் பண்ணை திட்டத்தின்கீழ் புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையின் ஒருபகுதியாக தமிழ்நாட்டின் தர்மபுரி மாவட்டத்திலுள்ள மெகா மார்க்கெட் (Mega Market) மற்றும் பெங்களூருவில் உள்ள SAFAL மார்க்கெட் ஆகியவற்றுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**7.** ஒப்பந்த பண்ணைத் திட்டத்தை எளிதாக்கும் பொருட்டு வேளாண் சந்தையில் அரசு மற்றும் தனியார்

பங்களிப்புடன் தனியார் விற்பனைக் கூடத்தை அமைப்பதற்கும் திட்டங்களை செயல்படுத்துவதற்கும், இந்திய அரசால் அனுப்பப்பட்டுள்ள மாதிரி சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, தற்போதுள்ள 1973ஆம் ஆண்டு புதுச்சேரி வேளாண் உற்பத்திப் பொருள் விற்பனைச் சட்டத்தினை திருத்துவதற்கு வேளாண் துறை நடவடிக்கைகள் எடுத்துள்ளது. சேமிப்பு கிடங்கு வசதிக்கு உள்ள முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மத்திய அரசு ஊக்குவிப்புத் திட்ட நிதி உதவியுடன், காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி ஆராய்ச்சி நிலைய வளாகம் மற்றும் மாதூர் மாநில விதைப்பண்ணை வளாகம் ஆகிய இடங்களில் விதை சேமிப்பு கிடங்குகள் இரண்டு கட்டப்படுகின்றன.

**8.** வேளாண் தொழிலாளர்களுக்கு பல்வேறு நல உதவிகளை அளிக்கும்பொருட்டு புதுச்சேரி வேளாண் பணியாளர்கள் நலச்சங்கம் அமைக்கப்பட்டு அதில் 35,242 (புதுச்சேரி பகுதியில் 28,759 மற்றும் காரைக்கால் பகுதியில் 6,483) விவசாய தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். இதுவரை 19,800 பயனாளிகளுக்கு மழைக் கோட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

9. கால்நடை வளர்ப்பு மற்றும் பால்பண்ணைத் தொழிலில் குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் வேலை வாய்ப்பை உருவாக்குவதிலும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதிலும் அதிக வாய்ப்பு உள்ளதால் திட்ட ஒதுக்கீட்டில் அவற்றிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. கால்நடை நிலையங்கள் மூலமாக அனைவருக்கும் கால்நடை பராமரிப்பிற்கான சேவைகள் இலவசமாக அளிக்கப்படுகிறது. இலவச சிகிச்சை அளிப்பது மட்டுமன்றி கால்நடைகளுக்கு தடுப்பூசி அளிப்பதற்காக 36 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. விவசாயிகளுக்கு, கால்நடை மேம்பாட்டின்கீழ் 1,432 மெட்ரிக் டன் கால்நடைத் தீவனம் மற்றும் 2,599 மெட்ரிக் டன் கன்றுக்குட்டி தீவனம், 75 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்பட்டது. செயற்கை கருவூட்டலின்கீழ் 23,173 கன்றுகுட்டிகள் ஈன்று எடுக்கப்பட்டுள்ளன. கால்நடைகள் இறப்பின் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு 314 விவசாயிகளுக்கு இழப்பீடு அளிக்கப்பட்டுள்ளது. வீட்டிலேயே கோழி வளர்க்க வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 400 விவசாயிகளுக்கு முட்டையிடும் கோழிகள் தலா ஐந்தும் மற்றும்

ஒரு வான்கோழி குஞ்சும், 50 விழுக்காடு மானியத்தில் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. 2010-11ஆம் ஆண்டில் 46,515 மெட்ரிக் டன் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**10.** மீன்வளத் துறையின் முக்கியத்துவம் கருதி எமது அரசு இத்துறைக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. 6,626 மீனவ முதியோர்களுக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் ₹ 900 முதியோர் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மீன்வள ஆதாரங்களை பாதுகாக்கும் பொருட்டு, ஏப்ரல் 15 முதல் மே 31 வரை மீன்பிடிக்க தடை செய்யப்படுகிறது. இதன் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் ₹ 2,750 நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதன்மூலம் 20,700 மீனவக் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளனர். ஆழ்கடல் மீன் பிடித்தலை ஊக்குவிக்கும் பொருட்டு இயந்திரப் படகு வாங்க மீனவர்களுக்கு 50 விழுக்காடு நிதியுதவி, அதிகபட்சமாக ₹ 11 இலட்சம் அளிக்கப்படுகிறது. மீன் வளர்ப்பை மேற்கொள்ள மீனவர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதற்காக, ஏக்கர் ஒன்றுக்கு ₹ 5,000

நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதுமட்டுமன்றி தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்கப்படுகிறது. மீன் வளர்ப்போர் அபிவிருத்தி முகவாண்மை மூலம் கட்டுமான மானியம் அளிக்கப்படுகிறது. ஏனாமில் (சாவித்திரி நகர்) மீன்பிடித் துறைமுகம் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. காரைக்கால் மீன்பிடித் துறைமுக இரண்டாம் கட்டப் பணிகள் முடிவடைந்து மூன்றாம் கட்டப்பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளது என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மொத்த மீன் ஏல விற்பனையும் காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

**11.** எமது அரசு தரமான மற்றும் தடையற்ற மின்சாரத்தை அளிப்பதில் உறுதி கொண்டுள்ளது. 17.321 கிலோமீட்டர் உயர் அழுத்த மின்கம்பி வடங்கள் மற்றும் 59.709 கிலோ மீட்டர் குறைந்த அழுத்த மின்கம்பி வடங்களுடன் புதிய பல்வேறு திறன்கள் கொண்ட 53 மின் வழங்கும் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. 34 மின்வழங்கல் மின் மாற்றிகளின் திறன் உயர்த்தப் பட்டுள்ளன. 3.925 கிலோமீட்டர் உயர் அழுத்த மின்கம்பி

வடங்கள் மற்றும் 25.729 கிலோமீட்டர் குறைந்த அழுத்த மின்கம்பி வடங்கள் வலிமைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 621 குறைந்தழுத்த மேல்நிலை மின்கம்பி வடச்சேவைகள் மற்றும் 52 மேல்நிலை தெருவிளக்குகளை நிலத்தடி கம்பி வடங்கள் மூலம் இணைக்க 1.662 கிலோமீட்டர் உயர் அழுத்த கம்பி வடங்கள் மற்றும் 14.225 கிலோமீட்டர் குறைந்தழுத்த கம்பி வடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 110 கிலோவாட் திறன் கொண்ட சேதராப்பட்டு – குரும்பாப்பட்டு உள்ளே மற்றும் வெளிச்செல்லும் (Line In - Line Out) கம்பிவட அமைப்பு கம்பிடப் பணிகள் பெரும்பாலும் முடிவடைந்துவிட்டன. நுகர்வோரை மனநிறைவு அடையச் செய்யும்பொருட்டும் அனைத்து வகையிலும் நுகர்வோரின் குறைகளை தீர்க்கும் பொருட்டும் நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்பு புதுச்சேரி சாரம் பகுதியில் செயல்பட்டு வருகிறது.

**12.** எனது அரசால் “புதுப்பிக்கவல்ல திறன் தொலைநோக்குப் பார்வை – 2020” திட்டம் கொண்டு வரப்படும். புதுப்பிக்கவல்ல ஆற்றலை மேம்படுத்தும்பொருட்டு பசுமை நிதியம் ஒன்று அமைக்கப்படும். புதுச்சேரி திறன் பாதுகாத்தல் நிதிக்கான விதிகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. ஆற்றல் திறன் அமைப்பானது

நிதியத்திற்கு ₹ 2 கோடி நிதி அளிக்கும். இதே அளவிற்கு புதுச்சேரி அரசும் நிதி அளிக்கும். புதுச்சேரியில் இத்தொகை, ஆற்றல் திறனை மேம்படுத்துவதற்கும், ஆற்றலை பாதுகாப்பதற்குமான ஒரு சுழல் நிதியாக இருக்கும். எனது அரசு மின்திறன் கழகம் மூலம், ஆற்றல் திறன் அமைப்பின் ஒத்துழைப்புடன் "பச்சட்" விளக்கு திட்டத்தை அமல்படுத்தும்.

**13**. இரண்டாம் நிலைத்துறை, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 41.29 விழுக்காடு பங்களிக்கிறது என்பதால், கல்லூரிகள், தொழில்நுட்ப கல்வி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவரும் வேலை செய்யக்கூடிய நபர் ஒவ்வொருவருக்கும் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும்பொருட்டு, தொழிற் துறையில் போதிய கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகி உள்ளது. திறன் மேம்பாட்டு அமைப்பானது வேலை இல்லா மக்களின் திறனை அதிகரிப்பதற்காக கூடுதல் முக்கியத்துவம் அளிக்க தொடங்கியுள்ளது. மேலும், அது புதுச்சேரியை ஒரு தொழிற்கேந்திரமாக உருவாக்க அரசு மற்றும் தனியார் பங்கேற்பு (PPP)

மூலம் அதிக முதலீட்டை கொண்டுவர திட்டமிட்டுள்ளது. கணினி வன்பொருளில் முன்னணி இடத்தில் உள்ள புதுச்சேரி மென்பொருள் பூங்கா அமைப்பதற்கு அதிக கவனம் செலுத்தவேண்டிய தேவையுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**14.** சுற்றுலாத் தொழில், பொருளாதார மேம்பாட்டில் மிகப்பெரும் பங்கு வகிக்கிறது. அது நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை அளிக்கிறது. மேலும், அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் அதிக வருவாயை ஈட்டுகிறது. சுற்றுலாவின்கீழ் புதுச்சேரியில் கடற்கரைச்சாலை நடைபாதையை அழகுபடுத்துதல், காரைக்கால் அம்மையார் கோயில் திருக்குளத்தை புனரமைத்தல் மற்றும் காரைக்கால் கடற்கரையை மேம்படுத்துதல், ஏனாமில் புத்தர் பூங்கா மற்றும் நீர்முகப்பு மேம்பாடு மற்றும் மாஹேயில் ஆற்றோர நடைபாதை அமைத்தல் போன்ற சுற்றுலா உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பல திட்டங்கள் நான்கு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள் இந்திய அரசால் மத்திய அரசு ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட தாராளமான நிதி உதவியினால் சாத்தியமாயிற்று. எமது அரசு, சாகச நீர் விளையாட்டுகளுக்கு ஊக்கமளிக்க உத்தேசித்துள்ளது. ஆற்றல்மிக்க சுற்றுலா மேம்பாட்டை அடையும்பொருட்டு, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான விரிவான சிறப்பு திட்டம் தயார் செய்யப்படும். புதுச்சேரி விமானத்தின் ஓடுதளம் ATR 72 ரக விமானங்களை கையாளும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின்போது புதுச்சேரியிலிருந்து விமான சேவையை துவக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுற்றுலாத் துறையால் கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த “அமைதியான புதுச்சேரி – ஓய்வெடுங்கள் காலத்திற்கு இடைவெளி கொடுத்து” என்னும் விளம்பரப் பிரச்சாரம் தனியார் முதலீட்டை ஈர்த்தல் வாயிலாகவும் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலமாகவும் போதிய பயனை அளித்துள்ளது. 2000ஆம் ஆண்டில் 1,000ஆக இருந்த தங்கும் அறைகள் 2010ஆம் ஆண்டில் 3,000ஆக அதிகரித்துள்ளன. அதேபோல் 5 இலட்சமாக

இருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 10 இலட்சமாக உயர்ந்துள்ளது. ஆன்மீக சுற்றுலாவிற்கு ஒரு வேகம் அளிக்கும் வகையில் திருநள்ளாறு கோயில் நகர மேம்பாட்டு திட்ட செயல்பாட்டுப் பணிகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன.

**15.** பொது விநியோக முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக நடப்பு நிதியாண்டின்போது உயிரிசார் விவரங்கள் கொண்ட மின்தகவல் அட்டை (Biometric Smart Card) அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஸ்மார்ட் கார்டுகளை அளிப்பதற்கு பொருத்தமான வகையில், தற்போதுள்ள அட்டைகளின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு கணினிமயமாக்கப்பட்டுள்ளன. தனி நபர்களின் உயிரிசார் விவரங்கள் பெறப்படுதல் இந்திய தனித்தன்மை அடையாள அதிகாரக் குழுவின் (UIDAI) கூட்டுழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் குடிமக்கள் ஒரு தனித்தன்மையான அடையாள எண்ணைப் பெறுவார்கள். இப்பணி நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும். இதுவரையில் 3,60,000 பேர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**16.** அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் (SSA) கீழ் பல்வேறு பள்ளிகளில் 220 கூடுதல் வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதை தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். காரைக்காலில் உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. 9 நடுநிலைப் பள்ளிகள் உயர் நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

**17.** இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை செயற்படுத்தும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த விதிகள் விரைவில் இறுதி செய்யப்பட்டு அறிவிக்கை வெளியிடப்படும். கல்வி உரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மாணவர் – ஆசிரியர் எண்ணிக்கை வீதம், தொடர் கல்வி நிலையில் மாணவர்களை தோல்வியுறச்செய்யாமை, பள்ளியை விட்டு அனுப்பாமை மற்றும் உடல்சார் தண்டனைக்கு ஒட்டுமொத்த தடை விதித்தல் போன்ற தரநிலைகளை புதுச்சேரி அடைந்துள்ளது. புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு, கல்வி பாதுகாப்பு உரிமை அதிகாரக் குழுவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**18.** அரசு பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் கல்வி ஆண்டு முழுவதும் வீட்டிலிருந்து கல்வி நிலையங்களுக்கு எளிதாகச் சென்றுவர "மாணவர்கள் சிறப்பு பேருந்துகளில்" பயணம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்னும் சலுகைக் கட்டணத்தில் போக்குவரத்துத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுச்சேரி பகுதியில் பள்ளி மாணவர்களுக்காக 40 பேருந்துகளும், கல்லூரி மாணவர்களுக்காக 15 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. காரைக்கால் பகுதியில் பள்ளி மாணவர்களுக்காக 10 பேருந்துகளும், கல்லூரி மாணவர்களுக்காக 5 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

**19.** அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுவதால், மாணவர்களின் வருகைப் பதிவேட்டில் முன்னேற்றம் காணப்பட்டு, மாணவர்களின் சேர்க்கையும் அதிகரித்துள்ளது. மேலும், இதனால் மாணவர்களின் உடல் ஆரோக்கியமும் உயர்ந்துள்ளது. இந்தியாவிலேயே, புதுச்சேரி யூனியன் ஆட்சிப்பரப்பில்தான், மதிய உணவு திட்டத்தின்கீழ் மாணவர் ஒருவருக்கு அதிகமாக செலவு செய்யப்படுகின்றது

என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு செய்யப்படும் செலவு ₹ 4.70லிருந்து ₹ 5.25ஆகவும், உயர் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்கு செய்யப்படும் செலவு ₹ 4.90லிருந்து ₹ 5.90 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவருக்கு நாள் ஒன்றுக்கு ஆகும் செலவு ₹ 6.70லிருந்து ₹ 7.80ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இராஜிவ் காந்தி காலை சிற்றுண்டி திட்டத்தின்கீழ் நாள் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ஆகும் செலவு ₹ 6.07லிருந்து ₹ 6.56ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

**20.** கடந்த ஆண்டுகளில், கல்வியில் சிறப்பான வளர்ச்சியை புதுச்சேரி கண்டுள்ளது. மத்திய பல்கலைக்கழகம் ஒன்றையும், மத்திய நிர்வாகத்தில் இயங்கும் மருத்துவக் கல்லூரியையும் கொண்டு புதுச்சேரி பெருமை பெற்றுள்ளது. இதுமட்டுமன்றி இவ்வாட்சிப் பரப்பில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் சங்கங்களால் ஒரு மருத்துவக் கல்லூரியும், 10 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஒரு பட்டமேற்படிப்பு

மையமும், 5 பல்தொழில்நுட்ப கல்லூரிகளும், 2 பொறியியல் கல்லூரிகளும், பல் மருத்துவம், கால்நடை மருத்துவம், சட்டம், பாராமெடிக்கல், பட்டயக் கல்வியியல், பட்டக் கல்வியியல், உணவு தயாரித்தல் ஆகிய படிப்புகளுக்கு தலா ஒரு கல்லூரியும் நடத்தப்படுகின்றன. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அதிக கல்லூரிகளை திறக்க முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளதால், அரசு கல்லூரிகள் மட்டுமன்றி, தனியார் துறையிலும் பல கல்வி நிலையங்களைத் துவக்க அனுமதி அளிக்கப்பட்டது. இதனால் சமூகத்தின் கல்வி தேவை பூர்த்தி செய்யப்படும்.

**21**. நடப்பு நிதியாண்டில், பெருந்தலைவர் காமராஜர் நிதியுதவி திட்டத்தின்கீழ் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்வி பயிலும் 1,662 மாணவர்களுக்கு கல்வி கட்டண உதவி அளிக்கப்பட்டது. இதற்காக ₹ 7.49 கோடி செலவு செய்யப்பட்டது. “திறன் மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த செயல் திட்டத்தின்கீழ் பல்தொழில்நுட்ப கல்லூரி ஆரம்பித்தல்” என்ற திட்டத்தின்கீழ் பிப்மேட் சங்கத்தின் மூலம் காரைக்காலில் அமைந்துள்ள பெண்களுக்கான

பல்தொழில்நுட்பக் கல்லூரிக்காக ₹ 12.30 கோடி மத்திய நிதியுதவி கோரி மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திற்கு செயற்குறிப்பு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. காரைக்கால் தேசிய தொழில்நுட்ப நிறுவனத்திற்கு நிலம் கையகப்படுத்தும் பணி முடியும் தறுவாயில் உள்ளது. தேவையான கட்டிடங்கள் கட்ட அரசுக்குச் சொந்தமான நிலம் முன்பே இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**22.** அதிநவீன வசதிகளுடன் கூடிய மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை புதுச்சேரியில் செயல்பட துவங்கியுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். புதுச்சேரியில்தான் பேறுகால இறப்பு விகிதம் 36 ஆக உள்ளது. தேசிய குறிக்கோள் ஒரு இலட்சம் பிறப்பிற்கு 100 ஆகும். மருத்துவ மனைகளில்தான் 100 விழுக்காடு பிரசவம் இருக்க வேண்டும் என்பதை ஊக்குவிக்கும் வகையில், ஊரகப் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு ஊக்கத் தொகையாக ₹ 700ம், நகரப் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு ஊக்கத் தொகையாக

₹ 600 ம் அளிக்கப்படுகிறது. பேறுகால இறப்பு விகிதத்தைக் குறைத்திட, பேறுகாலத்திற்குமுன் அருகிலுள்ள மருத்துவமனையில் நான்கு முறை பரிசோதனை செய்துகொள்ளுமாறு கர்ப்பிணி பெண்களுக்கு எடுத்துக்கூற சுகாதாரத் துறை பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மகப்பேறு மருத்துவ மனையில் மலட்டுத்தன்மைக்கான சிகிச்சை பிரிவு ஒன்றும் மரபுவழி ஆலோசனை சிகிச்சை பிரிவு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பெற்றோரிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி. பரவாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிநவீன கருவிகளின் உதவியுடன், 92 நோயாளிகளுக்கு இதயநாள அமைப்பை ஆராய்தல் (Coronary Angiogram) மற்றும் 16 நோயாளிகளுக்கு இதயநாள அடைப்பு நீக்கம் (Coronary Angioplasty) சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசு ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ், காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் பஞ்சகர்மா சிறப்பு சிகிச்சை பிரிவுகளும் புதுச்சேரி பகுதியில் தொக்கனம் மற்றும் வர்ம சிறப்பு சிகிச்சைப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**23.** ஜவஹர்லால் நேரு தேசிய நகரக புனரமைப்பு (JNNURM) திட்டத்தின்கீழ் குருசுக்குப்பத்தில் 96 வசிப்பிடங்கள் (8 தொகுப்புகள்) கட்டி முடிக்கப்பட்டு, கண்டறியப்பட்ட பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. வாழைக்குளத்தில் 72 வசிப்பிடங்கள் (6 தொகுப்புகள்) கட்டும் பணி முன்னேறி வருகிறது. ரெட்டியார்பாளையத்தில் 80 வசிப்பிடங்களுக்கான (5 தொகுப்புகள்) அடிப்படை கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும், 592 வசிப்பிடங்கள் (37 தொகுப்புகள்) கட்டும் பணி நடைபெற்றுவருகிறது. சமுதாயக்கூடம் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பகுதியில் அட்டவணை இனத்து மக்களுக்கு வீட்டு வசதிகளை அளித்திட, 9 இடங்களில் நிலம் கையகப்படுத்தும் பணி முடியும் தறுவாயில் உள்ளது. 6 இடங்களில் இப்பணி நடைபெற்று வருகிறது. ராஜிவ் வீட்டுவசதி திட்டத்தின்கீழ், புதுச்சேரி யூனியன் ஆட்சிப்பரப்பில் உள்ள வீடுகள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் பற்றிய ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும். "ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை" என்னும் திட்டத்தின்கீழ், புதுச்சேரி நகராட்சி, உழவர்கரை நகராட்சி, வில்லியனூர் மற்றும் அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்துகளில் உள்ள

அனைத்து 102 வார்டுகளிலும், குப்பைகள் அகற்றிடும் பணி துவக்கப்பட்டுள்ளது. ஏனாம் பகுதிக்கான குடிநீர் வழங்கீட்டுத் திட்டத்தின்கீழ், 22 கிலோமீட்டர் தொலைவிற்கு குழாய்கள் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

**24.** ஒதியஞ்சாலை காவல் நிலையம் ₹ 83 இலட்சம் செலவிலும், உருளையன்பேட்டை காவல் நிலையம் ₹ 2 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. "காவல் துறையை நவீனப்படுத்தல்" என்னும் திட்டத்தின்கீழ் ₹ 6.50 கோடி செலவில் காவலர் முகாம்கள், குடியிருப்புகள் மற்றும் ஓடுதுறை, திருநள்ளார் ஆகிய ஊர்களில் காவல் நிலையங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன. புதுச்சேரியில் கடற்கரையை அழகுபடுத்தும் பணி முடிவடைந்து அழகான தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. புதுச்சேரியில் காந்தி திடல் மற்றும் கைவினை அங்காடியை புனரமைக்கும் பணி ₹ 2.13 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், குபேர் சாலையில் பழைய சாராய வடிசாலை ஆலையிலிருந்து பார்க் விருந்தினர் இல்லம் வரையில் கான்கிரிட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாட்சிப் பரப்பில் ₹ 239.07 கோடி செலவில் 172 பணிகளை மேற்கொள்ள

நபார்டு வங்கியிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. இதில் ₹ 82.82 கோடி மதிப்பிலான பணிகள் முடிவடைந்துள்ளன. புதுச்சேரி பகுதியில், 19 ஊரக குடிநீர் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள தௌலேஸ்வரத்திலிருந்து ஏனாம் பகுதிக்கு குடிநீர் கொண்டுவரும் பணி நடைபெற்று வருகிறது. புதுச்சேரியில் உள்ள தேர்தல் துறைக்கான கட்டிடத்தில் கூடுதலாக இரண்டு மாடிகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாஹே ஆற்றோரத்தில் நடைபாதை அமைப்பதற்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட பணிகளுக்காக மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. காரைக்கால் அரசலாறு மீது புதிய பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பழுதடைந்த திருமலைராஜனார் பாலமும் சீர்செய்யப்பட்டதால் காரைக்கால் மற்றும் நாகூருக்குமிடையே தடைபட்டிருந்த போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

**25.** இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும் வகையில் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் அவர்களுக்கு புதிய பிரிவுகளில் பயிற்சி அளித்து இளைஞர்களின் திறமையை மேம்படுத்த எனது அரசு திட்டமிட்டுள்ளது. தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம்

திறமை மேம்படுத்தல் மற்றும் சான்றளிப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்படும். அயல் நாடுகளிலும், உள்நாட்டிலும் பொது மற்றும் தனியார் நிறுவனங்களில் குறிப்பாக உயிர் மருத்துவ பொறியியல் பிரிவில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட பிராங்கோ இந்திய வாழ்க்கை தொழிற்பயிற்சி நிறுவன சங்கம் மூலம் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தில், உயிர் மருத்துவ பொறியியல் பிரிவில் 20 பொறியாளர்களும், 40 தொழில்நுட்ப வல்லுனர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**26.** அட்டவணை இனத்து மக்களை சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் உயர்த்திட அவர்களின் மக்கள் தொகையின் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப, நிதி ஒதுக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த முன்னேற்ற திட்ட பகுதியில் ₹ 92 கோடி செலவில் 1,660 குடியிருப்புகள் கட்ட 17 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பிற பகுதிகளில் ஹட்கோ உதவியுடன் 1,340 குடியிருப்புகள் கட்ட 19 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அட்டவணை இனத்து மக்கள் வசிக்கும் இடங்களின் நிலைமையை

முற்றிலும் மாற்றிட புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் 37 இடங்களில் உள்ள 2,161 பழுதடைந்த வீடுகளை மறுபடியும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**27.** அரியூரில் ₹ 7.60 கோடி செலவில் 142 குடியிருப்புகள் கட்டப்பட்டு, பயனாளிகளுக்கு அளிக்க தயாராக உள்ளன. பிச்சவீரான்பேட்டில் ₹ 6.70 கோடி செலவில் 120 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அட்டவணை இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான உறைவிடப்பள்ளி ஒன்று அமைத்திட தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 28 அட்டவணை இனத்து மாணவர்கள் விடுதிகளில் 2,571 மாணவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். புதுச்சேரியில் அட்டவணை இனத்து மாணவிகளுக்காக விடுதி கட்ட ₹ 2 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. 4,670 மாணவ, மாணவியர்களுக்கு மெட்ரிக் வகுப்பிற்கு பிந்தைய வகுப்பு படிப்புதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது. அட்டவணை இனத்து மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்க நிலம் கையகப்படுத்த, ₹ 16.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து அட்டவணை இனத்து குடும்பங்களுக்கும் 2,30,000 ஜோடி

புடவை / லுங்கிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் படிக்கும் 14,650 அட்டவணை இனத்து மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்புதவி வழங்கப்பட்டுள்ளது. மாணவியர்கள் அதிகம்பேர் பள்ளியில் சேர்ப்பதை ஊக்கப்படுத்தும் வகையில், வாய்ப்புத் தொகையாக 7,470 அட்டவணை இனத்து மாணவியர்களுக்கு, ₹ 2.60 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

**28**. அட்டவணை இனத்தைச் சேர்ந்த 3,835 குடும்பங்களுக்கு திருமண மற்றும் பேறுகால உதவி அளிக்கப்பட்டுள்ளது. வருமான உச்சவரம்பு ஏதுமின்றி பொறியியல் மற்றும் மருத்துவம் பயிலும் 273 கல்லூரி மாணாக்கர்களுக்கு கல்வி கட்டண நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. அட்டவணை இனத்து மக்கள் வசிக்கும் இடங்களில் குடிநீர், சாலை, கழிவுநீர் மற்றும் சமுதாயக்கூட வசதிகள் அளித்திட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ₹ 20.35 கோடி அளிக்கப்பட்டது. இதுவரையில் 127 பணிகள் முடிவடைந்துள்ளன. சொந்தமாக வீடு கட்ட 3,400 குடும்பங்களுக்கு மானியமாக ₹ 21.40 கோடி அளிக்கப்பட்டுள்ளது. சுகாதாரமான கழிப்பிடங்களை கட்ட 537 வீடுகளுக்கு மானியமாக ₹ 7 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

**29**. சிறுபான்மையினர் மற்றும் பிற்பட்டோர் முன்னேற்றத்திற்காக, தனியாக ஒரு துறையை அமைத்திட எனது அரசு உத்தேசித்துள்ளது. மாற்றுத் திறன் அல்லாத ஒருவர் மாற்றுத் திறனாளியை மணந்தால் ஊக்கத் தொகையாக ₹ 25 ஆயிரம் அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, 65 சதவீதத்திற்குமேல் ஊனமுற்ற 155 நபர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனங்கள் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள், முதியோர்கள் ஆதரவற்ற பெண்டிர்கள் மற்றும் வறுமையில் உள்ளோர் ஆகியோர்களை தங்கவைத்து பராமரிக்கும் விடுதிகளை நடத்தும் அரசு அல்லா தொண்டு நிறுவனங்களுக்கு உதவிக்கொடை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில், ஒருங்கிணைந்த சிறார் பாதுகாப்புத் திட்டம் என்னும் ஒரு புதிய மத்திய அரசு ஊக்குவிப்புத் திட்டத்தை எனது அரசு அமுல்படுத்தும். இத்திட்டத்திற்கு நடுவண் அரசு ₹ 1.07 கோடியையும் புதுச்சேரி அரசு ₹ 1.27 கோடியையும் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நடப்பு நிதி ஆண்டில் உச்சநீதிமன்ற ஆணையின்படி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் இளங்குற்றவாளிகள் நீதிவாரியம் மற்றும் குழந்தைகள் நல குழுக்களும் அமைக்கப்படும்.

**30.** எனது அரசு இந்த ஆண்டு மே மாதம் முதல் முதியோர், விதவை மற்றும் ஆதரவற்றோருக்கான மாத ஓய்வூதியத்தை ₹ 750லிருந்து ₹ 1,000ஆக உயர்த்தியுள்ளது. இதனால் இவ்வாட்சிப்பரப்பில் உள்ள 1,19,148 ஓய்வூதியதாரர்கள் பயன் பெறுகிறார்கள். குலவிளக்கு, அரவணைப்பு, விதவை மறுமணத்திற்கு ஊக்கத் தொகை, விதவைகளின் மகளின் திருமணத்திற்கு உதவி, ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு உதவி, ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் உள்ள பெற்றோர் குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டால் நிதி உதவி போன்ற பல்வேறு திட்டங்களை மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

**31.** புதுச்சேரி யூனியன் ஆட்சிப்பரப்பின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பல்வேறு பொருள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதிப்பார்கள் என நான் நம்புகிறேன். உங்கள் முயற்சிகள் வெற்றிபெற என் வாழ்த்துக்கள்.

***ஜெய் ஹிந்த் !***